மகේ අංකය / எனது இல. / My No. } தமிழ் மொழிப்பெயர்ப்பு சுற்றுநிருபம் இலக்கம்: 03/2019
RG/MBD/1/சுற்றுநிருபம்

ඔබේ අංකය / உமது இல. / Your No.

දුරකථන අංක / தொலைபேசி இல. / Telephone Nos. } 2889488 / 2889489

ෆැක්ස් අංකය / தொலைநகல் / Fax No. } 2889491

ඊ මේල් / மின்னஞ்சல் / E-mail } rgd@sltnet.lk / rg@rgd.gov.lk

රෙජිස්ට්‍රාර් ජනරාල් දෙපාර්තමේන්තුව
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**REGISTRAR-GENERAL'S DEPARTMENT**

ප්‍රධාන කාර්යාලය
தலைமை அலுவலகம்
**HEAD OFFICE**

වෙබ් අඩවිය / இணையத்தளம் / Web site } www.rgd.gov.lk

තැ. පෙ. අංකය / த. பெ. இல. / P. O. Box No. } 565

234/A3,
ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත,
බත්තරමුල්ල.

234/A3,
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

234/A3,
Denzil Kobbakaduwa Mawatha,
Battaramulla.

2019.02.20

දිනය / திகதி / Date: ..............................

அனைத்து வலயப் பொறுப்பு உதவி பதிவாளர் நாயகங்கட்கு,

அனைத்து மாவட்ட பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்கட்கு,

**<u>1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் (49) வது பிரிவின் ஏற்பாடுகளினை உரித்தாக்கிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள்.</u>**

மேற்படி விடயம் சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம்

நபர் ஒருவரினால் கருத்திற் கொள்ளப்படக்கூடிய காலம் உபயோகித்தார் என அவதானிக்கப்படும் மற்றும் அந்நபரின் வசம் உள்ள பிறப்புச் சான்றிதழ், திணைக்களத்தின் புத்தகங்களில் உட்புகுத்தப்பட்டிராத சந்தர்ப்பம் பற்றி பல்வேறு பொதுமக்கள் முறையீடு/ கோரிக்கைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. பல்வேறு மனித, சமூக அல்லது தனிப்பட்ட காரணத்தின் பேரில் நபர்களினால் தெரிந்துக் கொண்டே போலியான சான்றிதழ்கள் உபயோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. மேலும் விசேடமாக பாடசாலை பிள்ளைகளின் தேசிய அடையாள அட்டையினை தயாரிப்பதற்கு செல்லும் சந்தர்ப்பங்களில் தான் இற்றைவரை உபயோகித்தக பிறப்புச் சான்றிதழ்கள் உரிய வித்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் அல்ல என தெளிவாகும் சந்தர்ப்பங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

பிறப்பானது உரிய விதத்தில் பதிவு செய்யப்பட்டிராத சந்தர்ப்பங்களில் 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் (24) வது பிரிவின் பிரகாரம் நடவடிகையினை மேற்கொண்டு காலங்கடந்த பிறப்பாக பிறப்பினை பதிவு செய்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் உள்ளது. எனினும் பெற்றோர் இருவரும் அல்லது ஒருவர் உயிருடன் இருக்கும் பொழுது பல்வேறு காரணங்களின் பெயரில் பிள்ளையின் பிறந்த திகதி, இடம் மற்றும் பெற்றோர்களின் தகவல்கள் எழுத்து மூலம் உறுதிப்படுத்துவத்ற்கு இயலாத சந்தர்ப்பங்களில் சட்டத்தின் (24) வது பிரிவின் கீழ் நடவடிக்கையினை மேற்கொண்டு பிறப்புச் சான்றிதழினை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு நடவடிக்கையினை மேற்கொள்ள இயலாது.

உதாரணம்:-

- விட்டில் பிறந்த பிள்ளை சம்பந்தமாக கிராம அலுவலர் / மகப்பேற்றுத் தாய் வழங்கிய அறிக்கையின் மூலப் பிரதி அழிவடைதல்/ பிரதி இல்லாமை.
- வைத்தியசாலையில் பிறந்த பிள்ளை சம்பந்தமாக வைத்தியசாலை அறிக்கை அழிவடைதல்/ பிரதி இன்மை
- வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தத்தின் தாக்கத்தினால் பதிவு செய்யப்பட்ட ஆவணம் திணைக்களத்திற்கு கிடைக்காமை / ஆவணங்கள் அழிவடைதல்

அதற்கிணங்க கீழ் குறிப்பிடப்பட்ட விதத்தில்,

- பிறப்பு உரிய விதத்தில் பதிவு செய்யப்பட்டிராமை
- 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் (24) ஆம் பிரிவின் கீழ் காலங்கடந்த பிறப்பாக பிறப்பினை பதிவு செய்வதற்காக பதிவாளர் நாயகத்திடம் எழுத்து மூலமான சாட்சி சமர்ப்பிக்க இயலாத,
- எனினும் பெற்றோர் இருவரும் அல்லது ஒருவர் உயிருடன் இருக்கும் பட்சம் வாழ்வியல் விஞ்ஞான சாட்சி (DNA) மூலம் சுய பெற்றோர்களாக உறுதிப்படுத்தக் கூடிய,

நபர்களின் பதிவு செய்யப்படாத பிறப்புக்கள் 1951 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் சட்டத்தின் (49) வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெற்றுக் கொள்ளப்படும் " நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையினை" சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய இயலும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அதற்கிணங்க மேற்படி விதத்திலான நிகழ்வுகள் தங்களுக்கு அறிக்கையிடும் சந்தர்ப்பத்தில் சட்டத்தின் (49) வது பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கினை தொடுத்து நீதிமன்றத்தின் கட்டளையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு உரிய திறத்தவருக்கு அறிவுறுத்துமாறு இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த சுற்று நிருபம் கிடைக்கப்பெற்றதனை அறிவிக்கவும்.

ஒப்பம்:- என்.சீ.விதானகே

பதிவாளர் நாயகம்

பிரதிகள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | சட்டமா அதிபர் | - | E 393/ 2018 தொடரிலக்கத்திற்கு இணங்க தகவலுக்காக |
| 2. | செயலாளர் - உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | - | தங்களது தகவலுக்காக |
| 3. | ஆணையாளர். ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களம் | - | தங்களது தகவலுக்காக |
| 4. | அனைத்து மாவட்டத்தின் செயலாளர்கட்கு / மேலதிக பதிவாளர் நாயகங்கட்கு | - | தங்களது தகவலுக்காக |
| 5. | தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் | - | தங்களது தகவலுக்காக |
| 6. | அனைத்து காணிப் பதிவாளர்கட்கும் | - | தங்களது தகவலுக்காக |